**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - கல்வி - விடுதிகள் - ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்/மாணவியர்களுக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவு கட்டணத் தொகை பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ. 40/- ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ. 80/- ஆகவும் உயர்த்தி வழங்க - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.4)துறை**

அரசாணை (நிலை) எண்.77

நாள். 26 .10.2021.
பிலவ ஆண்டு,
ஐப்பசி மாதம் 9-ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.3110,சமூகநலத்துறை, நாள் 27.11.1986.
2. அரசாணை (நிலை) எண்.36, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.4)துறை, நாள் 19.04.2012.
3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண். த1/15749/2021, நாள் 11.06.2021 மற்றும் 02.07.2021.

*******

**ஆணை:-**

மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிடர் நலம் அவர்கள் 2021-2022--ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார் :-

"ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு

பொங்கல், குடியரசு தினம், தமிழ்வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய ஐந்து விழா நாட்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் 19.04.2012-க்கு பிறகு உயர்த்தி வழங்கப்படாத நிலையில், தற்போது விலைவாசி உயர்வுக்கேற்றவாறு பள்ளி விடுதி மாணாக்கருக்கு ரூ.20/- லிருந்து ரூ.40/-ஆகவும் கல்லூரி விடுதி மாணாக்கருக்கு ரூ.40/- லிருந்து ரூ.80/- ஆகவும், உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 1,25,295 மாணாக்கர் பயன்பெறுவர். "

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்/மாணவியர்களுக்கு ஓர் ஆண்டில் ஐந்து விழாக்காலங்களுக்கு சிறப்பு உணவு வழங்குவதற்காக கல்லூரி விடுதி மாணவர்/மாணவியர் ஒருவருக்கு ஒரு ரூபாய் ஐம்பது காசு வீதமும், பள்ளி விடுதி மாணவர்/ மாணவியர் ஒருவருக்கு ரூபாய் ஒன்று வீதமும் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள், உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர் / மாணவியர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு பொங்கல், குடியரசுதினம், தமிழ்வருடப்பிறப்பு, சுதந்திரதினம் மற்றும் தீபாவளி ஆகிய ஐந்து பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கும் பொருட்டு கல்லூரி விடுதி மாணவர் / மாணவியர் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் ரூ.40/- ஆகவும், பள்ளி விடுதி மாணவர் / மாணவியர் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக்கட்டணம் ரூ.20/- ஆகவும் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 183 கல்லூரி மாணவர்/மாணவியர் விடுதிகளும் (கல்லூரி விடுதி 145, ஐடிஐ விடுதி 17, பாலிடெக்னிக் விடுதி 5, முதுகலை கல்லூரி விடுதி 15 மற்றும் சட்டக்கல்லூரி விடுதி 1), 1143 பள்ளி மாணவர்/மாணவியர் விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன எனவும், இவ்விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்/ மாணவியர்களுக்கு ஓர் ஆண்டில் ஐந்து விழாக்காலங்களுக்கு (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப்பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி) சிறப்பு உணவு வழங்குவதற்காக கல்லூரி மாணவர்/மாணவியர் ஒருவருக்கு ரூ.40/- வீதமும், பள்ளி விடுதி மாணவர்/மாணவியர் ஒருவருக்கு ரூ.20/- வீதமும் வழங்கப்பட்டு வரும் நிலையில், இக்கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு சுமார் ஒன்பது வருடங்களுக்கு மேலாவதால், விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, இச்சிறிய தொகையைக் கொண்டு மாணவர்/மாணவியர்களுக்கு சிறப்பு உணவு வழங்குவது சிரமமாக உள்ளதாக தெரிவித்து, இத்தொகையை கல்லூரி மாணவர்/மாணவியர் ஒருவருக்கு ரூ.40/- என்பதை ரூ.80/- ஆகவும், பள்ளி விடுதி மாணவர்/மாணவியர் ஒருவருக்கு ரூ.20/-

என்பதை ரூ.40/- ஆகவும் உயர்த்தி வழங்குமாறும், இதற்கான கூடுதல் செலவினம் ரூ.1,14,51,200/-க்கு (ரூபாய் ஒரு கோடியே பதினான்கு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து இருநூறு மட்டும்) கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதன் அடிப்படையில், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவர்/மாணவியருக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவிற்கான கட்டணத் தொகையை 2021-2022 ஆம் ஆண்டு முதல் பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.20/- லிருந்து ரூ.40/-ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கு ரூ.40/- லிருந்து ரூ.80/- ஆகவும் உயர்த்தி வழங்கியும், அதற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.1,14,51,200/-ஐ (ரூபாய் ஒரு கோடியே பதினான்கு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 01 ஆதிதிராவிடர் நலன் 227 கல்வி மாநிலச் செலவினங்கள் - AE மாணவர் இல்லங்கள் 367 உணவளிக்கும் / உணவுச் செலவுகள் 09 ஏனையவை.
> த.தொ.கு. எண்.2225 – 01- 227 - AE – 36 709"

7. மேலே பத்தி 5 இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 46176 / நிதித் (ஆதி(ம)பந)துறை/ 2021, நாள்.22.10.2021 இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:-</u>
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.

சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 001.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை-600 009/18/35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

**நகல்:-**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,சென்னை-600 009.
நிதித்(ஆதி(ம)பந) வ.செ.பொ-I/வ.செ.பொ-II/வ.வ.I)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை,சென்னை- 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/10/2021
பிரிவு அலுவலர்.
26/10/2021